kanton glarus

**Opferberatungsstelle**
**des Kantons Glarus**
Bahnhofstrasse 13
8762 Schwanden

Telefon: 055 646 67 36
E-Mail: opferberatung@gl.ch
www.gl.ch

opferhilfe-schweiz.ch
aiuto-alle-vittime.ch
aide-aux-victimes.ch

# வீட்டு வன்முறை பற்றிய தகவல்கள்

## வீட்டு வன்முறை என்றால் என்ன?

குடும்பத்தில் அல்லது (முன்னாள்) இணையரின் வன்முறையால் நீங்கள் பாதிக்கப்படுகிறீர்கள். வீட்டு வன்முறை என்பது ஒரு குடும்பத்திற்குள், தற்போதைய அல்லது பிரிந்த தம்பதிகளின் உறவில் உடல்ரீதியான, உளவியல்ரீதியான, பாலியல்ரீதியான வன்முறையாகும். உதாரணத்திற்கு:

- இருவர் உறவில் உடல் ரீதியான வன்முறை
- குழந்தைகளுக்கு எதிரான பெற்றோரின் உடல் ரீதியான வன்முறை
- இருவர் உறவில் அச்சுறுத்தல்கள் அல்லது உளவியல் வன்முறை
- முன்னாள் ஆண் அல்லது பெண் நண்பர் பின்தொடர்வது
- கணவன் மனைவி உறவில் பாலியல் வல்லுறவு
- குடும்பத்தில் பாலியல் துஷ்பிரயோகம்
- பராமரிப்பாளர்கள் அல்லது கவனிப்பாளர்களால் தவறாக நடத்தப்படுதல்
- பிள்ளைகளால் பெற்றோருக்கு எதிரான வன்முறை
- கட்டாய திருமணத்திற்கு அச்சுறுத்தல் அல்லது அதனை அமுலாக்கம் செய்வது

## நாங்கள் உங்களுக்காக என்ன செய்ய முடியும்?

பாதிக்கப்பட்டவர்களிற்கான ஆதரவு மையம் வன்முறையில் இருந்து வெளியேறுவதற்கான வழிகளைக் கண்டறிய உங்களுக்கு உதவுகிறது. உங்கள் உரிமைகள் குறித்து நாம் உங்களுக்குத் தெரிவிப்போம், மேலும் உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் மேலதிக உதவிகளை வழங்குவோம்:

- நீங்கள் கூறுவதை நாங்கள் கேட்கின்றோம், இதன் மூலம் நீங்கள் அனுபவித்ததைச் சொல்ல முடியும்.
- வன்முறையை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்பதைக் கருத்தில் கொள்ள நாங்கள் உங்களுக்கு உதவுகிறோம்.
- தொடர்ந்து என்ன செய்யலாம் என்பதை தீர்மானிக்க நாங்கள் உங்களுக்கு உதவுகிறோம், எடுத்துக்காட்டாக பிரிதல் / விவாகரத்து தொடர்பாக.
- எங்களால் உங்களுக்கு கூடுதல் உதவியை வழங்க முடியும், எடுத்துக்காட்டாக ஒரு வழக்கறிஞர், உளவியல் உதவி அல்லது நிதி உதவி.
- உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் பாதுகாப்பான இடத்தை பெற்றுக்கொள்ள எங்களால் உங்களுக்கு உதவ முடியும்.

## உங்களின் பொதுவான உரிமைகள் என்ன?

- பாதிக்கப்பட்ட நபராக, நீங்கள் பாதிக்கப்பட்டவருக்கான ஆலோசனையைப் பெற விரும்பும் இடத்தை தெரிவு செய்யலாம், (சுவிட்சர்லாந்து முழுவதும் உள்ள இடங்கள்). மேலதிக தகவல்களுக்கு www.opferhilfe-schweiz.ch).
- உங்களுக்கு சட்ட, சமூக அத்துடன் உளவியல் ஆலோசனைகளுக்கு உரிமை உண்டு.சேவைகளை எங்கள் ஆலோசனை மையம் இலவசமாக

வழங்குகின்றது. ஆலோசகர்கள் இரகசியத்தை பாதுகாப்பதற்கு உட்பட்டவர்கள். கிரிமினல் பற்றிய புகாரைப் பொருட்படுத்தாமல் நாங்கள் உங்களுக்கு ஆதரவு தருகின்றோம்.

- நிதி நிலைமையைப் பொறுத்து பாதிக்கப்பட்டவருக்கான ஆதரவு மையம் உளவியல் சிகிச்சை, அவசரகால தங்குமிடம், வழக்கறிஞரின் கட்டணம் போன்ற செலவுகளை ஈடுசெய்யும்.
- சில நிபந்தனைகளின் கீழ், கடைசியாக உங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்திய குற்றத்தின் 5 ஆண்டுகளுக்குள் இழப்பீடு அத்துடன் உளரீதியான நட்ட ஈடுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த காலம் 01/01/2007க்கு பின்பு ஏற்படுத்தப்பட்ட குற்றங்களுக்கு பொருந்தும்.

**குற்றவியல் நடவடிக்கைகளில் உங்கள் உரிமைகள் என்ன?**

- காவல்துறை மற்றும் குற்றவியல் அதிகாரிகளால் நீங்கள் விசாரிக்கப்படும் போது நம்பிக்கைக்குரிய ஒருவரை உதவியாக அழைக்கலாம்.
- முடிந்தால் குற்றம் சாட்டப்பட்ட நபரை நீங்கள் சந்திப்பதைத் தவிர்க்குமாறு நீங்கள் கோரலாம் (விசாரணைகள் மற்றும் தற்செயலான சந்திப்புகளுக்கு இது பொருந்தும்).
- குற்றவியல் அதிகாரிகளின் கோப்புகளை பார்வையிடப் போவதாக நீங்கள் கோரலாம்.
- முக்கியமான முடிவுகளை உங்களுக்குத் தெரிவிக்குமாறு நீங்கள் கோரலாம். உதாரணமாக, சந்தேக நபரை சிறையிலிருந்து விடுவிப்பது அல்லது வெளியேற்றுவது பற்றிய செய்திகள்.

**நீங்கள் பாலியல் வன்முறைக்கு ஆளானால் உங்களுக்கு என்ன உரிமைகள் உள்ளன?**

- நீங்கள் உங்கள் பாலினத்தை சேர்ந்தவரால் நேர்காணல் செய்யப்பட வேண்டும் என்றும் அதே பாலினத்தைச் சேர்ந்த ஒருவர் மொழி பெயர்ப்பாளராக உங்களை ஆதரிக்க வேண்டும் என்றும் நீங்கள் கோரலாம்.
- உங்கள் மறைவான அங்கங்கள் பற்றிய அறிக்கைகளை வெளியிட நீங்கள் மறுக்கலாம்.
- நீங்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களை நேரில் எதிர்கொள்ளப் போவதில்லை என்று கோரலாம்.
- விசாரணையில் குறைந்தபட்சம் ஒரு நபராவது உங்கள் பாலினத்தைச் சேர்ந்தவராகவும், பொதுமக்கள் விசாரணையின் போது விலக்கப்பட வேண்டும் எனவும் நீங்கள் கோரலாம்.

**குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரின் உரிமைகள் (18 வயதை விட குறைந்தவர்கள்)**

- அடிப்படை விதிகளின்படி வயதில் குறைந்த பாதிக்கப்பட்டவரை முழு குற்றவியல் நடவடிக்கைகளிலும் இரண்டு முறைக்கு மேல் நேர்காணல் செய்யக்கூடாது.
- ஆய்வுகள் ஒரு சிறப்பு பயிற்சி பெற்ற நபரால் மேற்கொள்ளப்படுகின்றன, அவை பொதுவாக படங்களாகவும் ஒலிநாடாக்களாகவும் பதிவு செய்யப்படுகின்றன.
- பிள்ளை கேட்டுக்கொண்டால் மட்டுமே குற்றம் சாட்டப்பட்ட நபரை நேரில் எதிர்கொள்ள உத்தரவிடப்படலாம், அத்துடன் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு கேட்கும் உரிமையை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில், அதாவது, எடுத்துக்காட்டாக, வீடியோப் பதிவு மேற்கொள்ளப்படாத போது.